# பாடம் 55: பாலினப் பிரச்சனைகள்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், திருமணம் என்பது கடவுளால் ஏற்படுத்திய நிறுவல் என்பதை நாம் கற்றோம். அவர் ஆணையும் பெண்ணையும் ஒன்றாக வைத்தார், அதனால் அவர்களின் அன்பு ஒன்றிப்பில் கடவுளின் இறை வாழ்வு பிரதிபலிக்கிறது, குழந்தைகளைப் பெற்று கடவுளின் வழிகளில் அவர்களை வளர்ப்பதன் வழியாக அவர்கள் கடவுளின் படைப்புச் செயலில் பங்கேற்கின்றனர். பாலுறவு என்பது தூய நோக்கத்துக்காக கடவுளால் படைக்கப்பட்டது என இது காட்டுகிறது. இந்த பாடத்தில், மனித பாலியல்புக்கான கடவுளின் வடிவமைப்புக்கு முரணான மனித முயற்சிகளால் வரும் திரிபுகள் பற்றி நாம் கற்போம். மனித பாலியல்பு விடயத்தில் மனித சமூகம் தடுமாறும் சில பெரியப் பிரச்சனைகளை நாம் விவாதிப்போம்.

**தற்போதைய பாடம்:**

1. மனித பாலியல்பைச் சார்ந்து, பெரிதும் மேற்கில் இன்று இரண்டு பெரிய மேலமை மெய்மைகள் இருக்கின்றன, உலகின் எஞ்சிய பகுதிகளையும் பாதிக்கின்ற அவற்றை எடுத்துரைத்து விவாதிப்பதே இப்பாடத்தின் நோக்கம். அவை பெண்ணிய இயக்கம் மற்றும் எல்ஜிபிடி இயக்கம்.

## பெண்ணிய இயக்கம்

2. சமூகத்தில் ஆண்களுக்கு கீழானவர்களாகவே பெண்கள் பெரிதும் பார்க்கப்படுகின்றனர் என பல நூற்றாண்டுகளாக நம்பப்படுகிறது. *அரசியல்* என்ற தலைப்பில் எழுதிய அரிஸ்டாட்டிலின் பார்வையில் இருந்து இப்பார்வை வந்ததாக பல அறிஞர்கள் நினைக்கின்றனர். இந்த முற்கால கிரேக்க மெய்யிலாரின் பார்வையில் பெண்கள், அடிமைகளுக்கு மட்டும் மேலானவர்களாகவும் ஆண்களுக்கு கீழ்ப்பட்டவர்களாகவும் பார்க்கப்படுகின்றனர்.

3. பல நூற்றாண்டுகளாக பெண்களை சமூகம் கீழ்ப்படுத்தியதன் விளைவாக, மேற்கில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து எழுந்த இயக்கங்கள், பெண்களுக்கு சமூகத்தில் சம மாண்பை நிலைநாட்டப் போராடுகின்றன. ஆண்களுக்கு நிகராகப் பெண்களின் சம மாண்பு, நுண்ணறிவு, திறன்கள், மற்றும் திறமைகளைக் கண்டுணரும் அவர்களது போராட்டத்தின் கருத்தியல் “பெண்ணியம்” என அழைக்கப்படுகிறது. பெண்ணிய இயக்கத்தின் முன்னேற்றம் இதுவரை நான்கு அலைகளாக நடைபெற்றுள்ளது.

அ) 19, 20ஆம் நூற்றாண்டுகளில், அரசியல் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமைக்கான பரப்புரை வடிவத்தில் சட்டப்பூர்வ சமத்துவத்துக்காக அவர்கள் போராடினர்.

ஆ) 1960களில், அவர்கள் வாக்குரிமை பெற்றதும், பணியிடங்களில் பெண்களுக்கு உதவ கல்வி வாய்ப்புகளில் சமத்துவம் மற்றும் இனப்பெருக்கச் சுதந்திரத்திற்காகப் போராடி, பெண்களுக்கு பரந்த சமூகத்தில் சமத்துவம் பெறுவதில் கவனம் செலுத்தினர்.
இ) 1990களின் முற்பகுதியில், இனப்பெருக்க உரிமைகள், எல்ஜிபிடி உரிமைகள், பாலின வகிநிலைகளின் மறுவரையறை, மற்றும் பாலின நடுநிலை மொழிப்பயன்பாடு போன்ற குறிப்பிட்ட பிரச்சனைகள் வழியாக தங்களை வரையறுக்கும் அடிப்படையில் பெண்களின் உரிமைகளை வெளிப்படுத்தப் போராடினர்.
ஈ) 2012 முதல், பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கு எதிராக சமூக ஊடகங்கள் வழியாகப் போராடுகின்றனர்.

வெளிப்படையாக, கிறிஸ்தவ கண்ணோட்டத்தில், சமூகத்திற்கு தொலைவான பெண்களின் உரிமைகளைச் சுமந்து நிற்கும் பெண்ணிய கருத்தியல், பாலினம் மற்றும் பாலியல்பின் பொருளையும் நோக்கத்தையும் அதிகமதிகமாகக் குழப்புகிறது. சமூகத்தில் பெண்களின் இடம் குறித்த கடவுளின் கருத்தில் தெளிவுபெற நாம் திருச்சபையிடம் திரும்ப வேண்டும்.

4. இரண்டாம் வத்திக்கான் சங்கம் சமூகத்தில் பெண்களுக்கு இறைவன் வழங்கிய வகிநிலையை முன்னிறுத்தி பெண்களின் கவனத்திற்கு அவசர அழைப்பு விடுக்கிறது:

*பெண்களுக்கு சங்கத்தின் செய்தி*, டிசம்பர் 8, 1965: “நேரம் வருகிறது, உண்மையில், வந்தே விட்டது, பெண்களுக்கான அழைத்தல் அதன் முழுமையில் ஒப்புக்கொள்ளப்படும் பொழுது, அந்த நேரத்தில் உலகில் பெண்கள் இதுவரை ஒருபோதும் பெறாத செல்வாக்கு, தாக்கம், அதிகாரம் பெறுகின்றனர். இதன் காரணமாக, மனித இனம் ஓர் ஆழ்ந்த உருமாற்றத்திற்குள் செல்லும் இத்தருணத்தில், நற்செய்தியின் உந்துதலால் அகவூட்டம் பெற்றப் பெண்கள் மனிதகுலம் வீழ்ச்சியுறாதிருக்க அதிகம் செய்ய முடியும்.”

இந்த கூற்று, வாழ்வின் பல்வேறு அம்சங்களில் நலிவுற்று காணப்படும் நவீன சமூகத்தில் வழிகாட்டும் சக்திகளாக எழுச்சியுறப் பெண்களுக்கு அழைப்பு விடுக்கிறது. இது உள்ளார்ந்த மற்றும் பிரிக்கவியலாத பெண்களின் மாண்பை சங்கத் தந்தையர் கண்டுணர்ந்ததன் இயல்பான விளைவாகும்.

5. பெண்ணின் உள்ளார்ந்த மதிப்பும் மாண்பும் ஒவ்வொரு மனிதரின் உள்ளியல்பான மதிப்பில் இருந்து உணரப்படுகிறது (கதிம 1928-1938). கடவுள் மனிதரை “ஆணும் பெண்ணுமாக” படைத்தார் என்று தொடக்க நூல் 1:27 நமக்கு கூறுகிறது, இந்த இரண்டு பாலினத்தாரின் உடல்களும் “கடவுளின் உருவாக” இருக்கின்றன. ஆண்கள் மட்டுமே மனிதகுலத்தின் மாட்சியை அதன் முழுமையில் பிரதிபலிக்கவில்லை. இரண்டு பாலினங்களின் நிறைவுநிலையே ஒருசேர கடவுளின் உருவின் பிரதிபலிப்பை அதிக முழுமைக்கு கொணர்கிறது.

*கதிம 2393*: ‘‘மனிதர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்ததால், ஒருவர் மற்றவருக்கு நிகரான தனிப்பட்ட மாண்பை கடவுள் அளிக்கிறார். ஆண், பெண் ஒவ்வொருவரும், தனது பாலின அடையாளத்தை ஏற்றுக்கொள்ளவும் ஒப்புக்கொள்ளவும் வேண்டும்.’’

6. ஆள்நிலையின் கிறிஸ்தவப் புரிதலில் இருந்து வெளிப்படும் அத்தகைய உலகளாவிய மனித உரிமைகள் அடிப்படையில், ‘‘கிறிஸ்தவப் பெண்ணியம்’’ குறித்து பேசிய திருத்தந்தை 2ம் யோவான் பவுல், பெண்கள் குறித்த முழு உண்மையை வெளிப்படுத்துவதன் அவசியத்தை உணர்த்தினார். சமூக வாழ்வின் எல்லா கூறுகளிலும் பெண்கள் இருப்பதன் முக்கியத்துவத்தை அவர் ஏற்றுக்கொண்டார். அதனோடு இணைந்து, அவர்களிடம் உள்ளவற்றின் மாண்பையும் அவர் தற்காத்தார்: அவர்களின் திறமை, அவர்களின் தொழில்திறம், அவர்களின் அறிவுசார் திறன்கள், அவர்களின் ஆழ்ந்த உணர்திறன், பெண்களின் மேலும்பல உள்ளார்ந்த தகுதிகள்.

7. தூய கத்தோலிக்க திருச்சபை முன்னில்லாத விதத்தில் பெண்களின் பங்கை ஏற்றுக் கொண்டுள்ளது. முன் ஒருபோதும் இல்லாதது போன்று, பெண்களின் சம மாண்பை இறையால் வழங்கப்பட்ட, வேறெந்த நபராலும் பறிக்கவியலாத உள்ளார்ந்த உரிமையாகத் தற்காக்கிறது.

எனினும், மனிதரின் கடந்தகால வரலாற்றைத் துணிந்து ஆராய உந்தப்படும் வேளையில், 2ம் யோவான் பவுல் பேசிய விதத்திலான பெண்ணியத்தை மாறுபட்ட வடிவிலான இன்றையக் குடிமை சமூகத்தில் காணப்படும் விதத்திலான பெண்ணியத்தோடு ஒப்பிட வேண்டும்.

8. திருச்சபையின் படிப்பினைகளைப் பொருத்தவரை, அதிகாரப்பூர்வப் பெண்ணியம் என்பது பெண்கள் ‘‘தங்களது பெண்மையின் முழு பொருளையும் கண்டறிந்து, மற்றவர்களுக்கு ‘தங்களைக் கொடையாக’ உருவாக்குவதில், தங்களைக் கண்டறிதலாகும்’’ (*முலியரிஸ் டிக்னிடாட்டம்*, 31). இதை ஒரு பெண் ‘‘சுதந்திரமாகச் செயல்படுதல்’’ என்ற விதத்தில் மட்டும் கூறலாம்.

ஒரு பெண்ணின் சுதந்திரம் அவர் யாராக இருக்க வேண்டும் என்ற அவரது திறனில் காணப்படுகிறது, மேலும் மற்றொருவரைப் போன்று அல்லது மற்றொருவரின் திறனில் செயல்படுவது அன்று. பல பெண்கள் குறிப்பிடுவது போல, மாண்பின் சமத்துவம் என்பதை ‘‘ஆண்களுக்கு நிகராக’’ என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. அத்தகைய புரிதல் பெண்மையின் உள்ளியல்பான மதிப்பையும் தனித்துவமான செல்வத்தையும் சிதைத்து பெண்களையும் பெரும் சமூகத்தையும் வெறுமனே ஏழ்மையாக்குகிறது (*திருமதி ஜெர்த்ருத் மோஞ்சலாவுக்கு திருத்தந்தை 2ம் யோவான் பவுலின் மடல்*, 26 மே 1995).

9. இந்த குறிப்பில், சமூகத்தில் உள்ள பெண்ணியவாதிகளின் சில கும்பல்கள் ஏற்கவியலாத சாய்வுகளைத் தாண்டி வெளிக்காட்டுவதை ஒருவர் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, ஆண் தன்மையைப் பயனற்றதாக ஆக்குவதும் பெண்களின் சமத்துவத்தில் அடங்கியுள்ளதாக சில பெண்ணியவாதிகள் கருதுகின்றனர். அவர்களின் வார்த்தை வெளிப்படுத்தல்களின் தாழ்ந்த

குரல்கள் ‘‘ஆண்கள் யாருக்கு வேண்டும்’’ என்ற மனப்பாங்கைக் காட்டுகிறது. பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க சில பெண்ணியவாதிகள் மேற்கொள்ளும் எதிர்ப்பு அணுகுமுறை ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஊடிடை மதிப்பை வளர்க்காமலும், அடையாளம் மற்றும் ஒருவர் மற்றவருக்கானப் பங்கைக் கண்டுணராமலும் ‘‘எதிர்ப்பை வளர்ப்பது’’ கிறிஸ்தவ மனநிலைக்கும் மெய்யியலுக்கும் எதிரானது.

மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டாக, ஆண்கள் செய்யும் எதையும் செய்கின்ற உரிமைக்காகப் பெண்கள் போராடுவது இருக்கிறது. வரலாற்றிலும் பண்பாட்டிலும் பெண்கள் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கிறதாகக் கூறப்படுவதால், பெரும்பாலான பெண்கள் அதைத் தலைகீழாக மாற்ற, பொதுவாக ஆண்களுக்குப் சாற்றப்படும் விடயங்களைப் பெண்களாலும் சிறப்பாகச் செய்ய முடியும் என்று காட்ட விரும்புகின்றனர். தாய்மை போன்ற மரபுசார் பங்களிப்புகளில், புதிய ‘‘ஆண் தன்மைக்கு’’ வழிவகுப்பது சமூகத்தை இன்னும் நொறுங்கச் செய்கிறது.

10. திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல், பெண்களின் பங்கை ‘‘சமூக விளிம்புகளுக்கு தாழ்த்துவது மற்றும் அடிமைவேலைக்கு தாழ்த்துவதில்’’ பண்பாட்டு கட்டுப்பாடு கருவியாக இருந்துள்ளது (*பெண்களுக்கு திருத்தந்தை 2ம் யோவான் பவுலின் மடல்*). இந்த மெய்மையே பெண்களின் மாண்பை மீட்டெடுக்கும் புதிய முயற்சிக்கு வழிவகுக்கிறது.

எனினும், பொது வாழ்வின் அனைத்து தளங்களிலும் பெண்கள் ஆர்வமாக ஈடுபட வேண்டும் என்பதை திருச்சபை ஏற்கின்ற வேளையில், கடவுளின் இறை வடிவமைப்புக்கு ஏற்ப ‘‘பெண் தன்மை’’ என்பதன் உள்ளார்ந்த பொருளைக் கட்டமைக்கும் பெண்களின் மரபுசார் பங்கை அது பாதுகாக்கிறது.

11. உண்மையான கிறிஸ்தவப் பெண்ணியம் என்பது, ஆணும் பெண்ணும் சமம், இரண்டு பாலினத்தாரும் கடவுளால் அவரது உருவில் படைக்கப்பட்டுள்ளனர், ஒவ்வொருவரும் வேறுபட்ட ஆனால் நிறைவுசெய்யும் கொடைகளையும் இயற்பண்புகளையும் கொண்டுள்ளனர் என்பதை ஏற்பதாகும். ஆண்கள் மற்றும் பெண்களின் சமூகம் மற்றும் திருச்சபை சார்ந்த பங்களிப்புகள் மனிதர்களுக்கான இறைத்திட்டம் மற்றும் இயற்கை சட்டத்துக்கு இணக்கமாக இருக்க வேண்டும். ஆண் ‘ஆதிக்கத்தில்’ இருந்து விடுதலை பெறுதல் என்னும் பெயரில், பெண்கள் தங்களது சொந்த பெண்சார் ‘உண்மைநிலைக்கு’ முரணான ஆண் பண்புகளோடு தங்களைப் பொருத்திக்கொள்ளக் கூடாது’’ என்று 2ம் யோவான் பவுல் அறிவுறுத்துகிறார் (*முலியரிஸ் டிக்னிடாட்டம்*, 10).

12. குழந்தைகளை வளர்த்தல் மற்றும் குடும்பத்தின் மீது அக்கறை செலுத்தல் என்பவற்றை சில பெண்கள் முழுநேர அழைத்தலாக ஏற்று, தங்களது பெண் தன்மையில் பிளவுபடா அர்ப்பணத்தைக் காட்டுகின்றனர். அவர்களைப் பண்பாட்டு கட்டுப்பாட்டின் அறிவொளி பெறாத கைதிகளாக பார்க்கப்படக் கூடாது.

13. திருத்தந்தை புனித 6ம் பவுல், பெண்களுக்கான ஓர் ஊக்கவுரையில் கூறுகிறார்: ‘‘பெண்களே நீங்கள் எப்பொழுதும் இல்லத்தின் பாதுகாப்பில் பெரும்பங்கு கொண்டுள்ளீர்கள்... வாழ்வின் தொடக்கத்தின் மறைபொருளில் நீங்கள் இருக்கின்றீர்கள். இறப்பின் துயரில் நீங்கள் ஆறுதல் வழங்குகிறீர்கள். நமது தொழில்நுட்பம் மனிதத்தன்மை அற்றதாக மாறும் ஆபத்தில் இருக்கிறது. ஆண்களை வாழ்வோடு ஒப்புரவாக்குகின்றீர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த இனத்தின் எதிர்காலத்தின் மீது அக்கறை செலுத்த, நாம் உங்களை வேண்டுகிறோம். நாகரிகத்தை அழிக்கும் முயற்சியில் மடமையின் தருணத்தில் உள்ள ஆணின் கரத்தைத் தடுத்து நிறுத்துங்கள். உலகெங்கும் உள்ள பெண்கள், கிறிஸ்தவராக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் -- வரலாற்றில் இந்த கொடியத் தருணத்தில் உங்களிடமே வாழ்வு ஒப்படைக்கப் பெற்றுள்ளது, உலக அமைதியைக் காப்பது உங்களுக்குரியது.’’

## எல்ஜிபிடி இயக்கம்

14. (கடவுளின் இறை உரிமைகளைப் புறந்தள்ளி) மனித உரிமைகளை மிகவே உயர்த்திப் பிடிக்கும் பல சமூகங்களில் தற்போது ஒரு பெரிய சமூகப் பிரச்சனை எழுந்துள்ளது. இந்த சமூகங்களும், அரசுகளும் கூட, எல்லா தனிநபர்களும் தங்களது உணர்ச்சி மற்றும் உளவியல் தேவையை நிறைவேற்றும் விதத்தில் தங்கள் உடல்களைப் பயன்படுத்துவதில் முடிவெடுக்கும் உரிமையை உயர்த்திப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தகைய சமூகங்களில், இலக்குசார் மெய்மையில் இருந்து உளவியல் மற்றும் உணர்ச்சிகள் சார்ந்த பற்றுணர்வை நோக்கியதாக சட்டங்கள் மாறுகின்றன. இந்த விதத்தில், ஆன்மாவுக்கு என்ன நேரிடும் என்பதைப் பொருட்படுத்தாமல், நமது உடல்களின் பயன்பாட்டினை அனுமதிக்கும் கடவுளின் உச்ச அதிகாரத்தைக் கைப்பற்ற மனிதகுலம் தற்போது முயற்சிக்கிறது.

*அமோரிஸ் லெத்திசியா*, 56: ‘‘இன்னும் பாலினம் சார்ந்த கருத்தியலின் பல்வேறு வடிவங்கள் மற்றொரு சவாலை முன்வைக்கின்றன, அது ‘ஆண் மற்றும் பெண்ணில் உள்ள இயல்பான வேறுபாட்டையும் எதிர்நிலையையும் மறுத்து, குடும்பத்தின் மானிடவியல் அடிப்படையை நீக்கி விட்டு பாலின வேறுபாடுகள் அற்ற சமூகத்தை எதிர்பார்க்கிறது. இந்த கருத்தியல் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உயிரியல் வேறுபாட்டில் இருந்து பிரிந்துநிற்கும் தனிநபர் அடையாளம் மற்றும் உணர்ச்சி நெருக்கத்தை ஊக்குவிக்கும் கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் சட்ட நடைமுறைகளுக்கு இட்டுச் செல்கிறது. தொடர்ச்சியாக, மனித அடையாளம் என்பது தனிநபரின் தெரிவாக மாறுகிறது, அதை காலப்போக்கில் மாற்றிக்கொள்ளலாம்.’ இத்தகைய சில கருத்தியல்கள் கவலையின் ஆதாரமாக இருக்கின்றன, புரிந்துகொள்ளும் ஆசைகள் எவை என்பதற்கு சில நேரங்களில் பதிலிறுப்பதையும், அறுதியான மற்றும் வினாவுக்கு உட்படாதவையாய் தம்மை நிலைநாட்டவும், குழந்தைகள் எப்படி வளர்க்கப்பட வேண்டும் என கட்டளையிடவும் அவை விரும்புகின்றன. ‘உயிரியல் பாலுறவும் சமூகப்பண்பாட்டில் பாலுறவின் பங்களிப்பும் வேறுபடுத்தக் கூடியவை ஆனால் பிரிக்க இயலாதவை’ என்பதை வலியுறுத்துவது தேவையாகிறது. ...மனித வலுவின்மை மற்றும் வாழ்வின் சிக்கல்களைப் புரிந்துகொள்வது ஒரு

விடயம், மெய்மையின் பிரிக்கவியலா கூறுகளைத் துண்டிக்க முயற்சிக்கும் கருத்தியல்களை ஏற்பது மற்றொன்று. படைத்தவரை இடம்மாற்ற முயற்சிக்கும் பாவத்தில் நாம் விழாதிருப்போம். நாம் படைப்புகள், எல்லாம் வல்லவர்கள் அல்லர். நமக்கு முன்பே இருக்கின்ற படைப்பை நாம் கொடையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில், நமது மனிதகுலத்தைப் பாதுகாக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம், முதன்மையாக இதன் பொருள், படைக்கப்பட்ட விதத்தில் அதை ஏற்றுக்கொள்வது மற்றும் அதை மதிப்பதாகும்.''

15. பெண்ணிடையீர்ப்பு, ஆணிடையீர்ப்பு, இருபாலீர்ப்பு, மற்றும் மாற்றுப்பாலினத் தனிநபர்களின் (எல்ஜிபிடி) உரிமைகளுக்காகத் தொடங்கப்பட்ட இயக்கமானது, தற்போது பாலொவ்வார், இடைப்பாலினம், பாலற்றவர், மற்றும் இவற்றுக்குள் பொருத்த முடியாத வழமையற்ற பாலின அடையாளங்களை உள்ளடக்கி விரிவடைந்துள்ளது (சுருக்கமாக எல்ஜிபிடிக்யுஐஏ+).

16. நேர்பாலீர்ப்பு நடத்தை ஒரு குற்றச் செயலாகக் கருதப்பட்டது. 1940களில் இருந்து, பல நேர்பாலீர்ப்பு உரிமைகளுக்கானக் குழுக்கள் மேற்கில் தோன்றி, ஒரேபாலின உறவுநிலைகளின் சட்டப்பூர்வ உரிமைகளுக்காகப் போராடின. அந்நேரத்தில், பாலுறவை விடவும் காதலை வலியுறுத்தும் விதமாக ''ஹோமோசெக்சுவல்'' என்றல்லாது ''ஹோமோபைல்'' என்ற பதத்தை அவர்கள் முன்னிறுத்தினர். 1960களில், ஒரேபாலின உறவுநிலைகள் மேற்கில் குற்றமற்றவை என்றாகத் தொடங்கின. அதே நேரம், இருபாலீர்ப்பு மக்களின் உரிமைகளை முன்னெடுத்த செயற்பாட்டாளர் குழுவினர் தோன்றினர், 1970களில் அவர்கள் முனைப்பாக இருந்தனர்.

17. ஒரேபாலின உறவுநிலைகளில் உள்ள மக்களின் திருமணத்தை சட்டப்பூர்வமாக ஏற்கும் கோரிக்கைக்கான பல ஆண்டுகள் போராட்டத்தால், 2001ல் ஒரேபாலின ''திருமணத்தை'' சட்டப்பூர்வமாக்கிய முதல் நாடாக நெதர்லாந்து மாறியது. அதிலிருந்து மேற்கிலுள்ள மற்ற பல நாடுகளும், ஆசியா மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களின் வேறுபல நாடுகளும் அதைச் செய்துள்ளன.

சில இடங்களில், திருமணம் செய்துகொள்ளும் ஒரேபாலின இணையருக்கு குழந்தைகளைத் தத்தெடுக்கும் சட்டப்பூர்வ உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. உண்மையில், அந்த இடங்களில் தத்தெடுப்பு முகமைகள் (குழந்தைகளைத் தத்தெடுக்க வரும்) ஒரேபாலின இணையருக்கு ஒரேபாலின ஒன்றிப்பைக் காரணம் காட்டி மறுப்பு தெரிவிக்க அனுமதியில்லை. இந்த முகமைகள் பாகுபாட்டுக்கு உள்ளாகலாம்.

பல மேற்கத்தியப் பள்ளிகளில், குழந்தைகள் இளம் வயதில் இருந்தே ஒரேபாலின உறவுகள் மற்றும் இரண்டு தந்தையர் அல்லது இரண்டு அன்னையரால் வளர்க்கப்படுவதை ஏற்கத் தற்போது கற்பிக்கப்படுகின்றனர். பாலின ஈர்ப்பு சார்ந்த விடயத்தில் ஆசிரியர்கள் ஒரேபாலின ஒன்றிப்புகளுக்கு முரணான தங்களது நிலைப்பாடுகளைக் கற்பிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இந்த பள்ளிகளில், குழந்தைகள் வளரும் பொழுது எதிர் பாலினத்தாரால் ஈர்க்கப்பட வேண்டும்

என்றும் கற்பிக்கக் கூடாது; ஒரே பாலினத்தைச் சேர்ந்த ஒருவரிடம் ஈர்க்கப்பாட்டாலும் அது ஏற்புடையதே என்று அவர்களுக்கு கூறப்பட வேண்டும்.

18. மேற்கத்திய சமூகத்தில் உள்ள எல்லா மக்களும் அத்தகைய இயக்கத்திற்கு ஆதரவாக இல்லை. உண்மையில் அத்தகைய ஒன்றிப்புகளை ‘‘திருமணங்கள்’’ என்று குறிப்பிடுவதற்கு உடன்படாத பலர் இருக்கின்றனர். அத்தகைய ‘‘திருமணங்கள்’’ சட்டப்பூர்வம் ஆகுமென்றால், அது ஒரு நேரத்தில் பலதுணை திருமணங்களை (ஒன்றுக்கும் மேற்பட்டவர்களை மணத்தல்) சட்டப்பூர்வமாக்க வழிதிறக்கும், அது நலமற்ற அறநெறியற்ற நடத்தையை ஊக்குவிக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர். அத்தகைய உறவுநிலைகளை அனுமதிப்பது குடும்பத்தின் மரபுசார் நிறுவலைச் சிதைக்கும் என்றும் அவர்கள் நம்புகின்றனர், ஒரு குழந்தை உளவியல் சார்ந்து நலமாக இருக்க (இரண்டு தந்தையர் அல்லது இரண்டு அன்னையரால் அன்றி) ஒரு தந்தை மற்றும் ஒரு தாயால் வளர்க்கப்படுவது தேவை என்றும் கருதுகின்றனர்.

ஒரேபாலின திருமணங்களில் நுழையும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க மற்றும் குழந்தைகளைத் தத்தெடுக்கச் செயல்படுத்தப்படும் சட்டங்கள், இந்த கருத்தியலை எதிர்க்கும் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் மூடப்பட வழிவகுக்கும். ஒரேபாலின இணையரின் திருமணத்தை மறுத்தல் அல்லது ஒரேபாலின இணையர் குழந்தைகளைத் தத்தெடுக்க அனுமதியாமை அவர்கள் பாகுபாட்டாளர்களாக குற்றம் சுமத்தப்படும் சட்டப்பூர்வ பிரச்சனைக்குள் அவர்களைத் தள்ளும்.

19. மனிதர்கள் நடுவிலான பாலியல் செயல்பாட்டுக்கான கடவுளின் திட்டம் திருமணத்தின் நிறுவலுக்கானதாக இருக்கிறது. அது தமது இறை வாழ்வைப் பிரதிபலிக்கும் அன்பின் ஒன்றிப்புக்குள் ஆணையும் பெண்ணையும் வைக்கின்ற அவரது இறைத் திட்டத்தால் அது ஆளப்படுகிறது. ஆகவே, கடவுளின் நோக்கத்தைப் பொருத்தவரை, திருமணம் எப்பொழுதும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஒன்றிப்பைக் கொண்டுள்ளது, மேலும் அத்தகைய ஒன்றிப்பின் சூழமைவுக்குள் நடைபெறும் பாலியல் வெளிப்படுத்தலில், ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றவரை நிறைவுசெய்து கடவுளின் வாழ்வையும் அன்பையும் பிரதிபலிக்கின்றனர். இன்னுமாக, திருமணத்தில் எதிர்பார்க்கப்படும் விளைவாக இந்த தூய ஒன்றிப்பின் இறைமை வழங்கும் கனியாக வழித்தோன்றலை உருவாக்குதல் இருக்கிறது. ஒரே பாலினத்தைச் சேர்ந்த இருவர் ஒருவர் மற்றவருடன் தங்களை ஒன்றிக்க நாடும் பொழுது, உயிரியல் இணக்கமின்மை விளைவாகத் திருமணத்தின் நோக்கங்களில் ஒன்றான இனப்பெருக்கம் சாத்தியமற்றதாகிறது. இதன் காரணமாக, கத்தோலிக்க திருச்சபை ஒரேபாலின ஒன்றிப்புகளை அதன் உண்மை பொருளில் திருமணமாக ஏற்க இயலாது.

*கதிம 1601*: ‘‘திருமண உடன்படிக்கையால், ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தங்களிடையே நிறுவும் முழு வாழ்வுக்கான ஒரு கூட்டாளித்துவம், அதன் இயல்பிலேயே துணைவர்களின் நலன் மற்றும் இனப்பொருக்கம் மற்றும் வழித்தோன்றல்களின் கல்விக்கானதாக... அமைக்கப் பெற்றுள்ளது.’’

*கதிம 2333*: ‘‘ஒவ்வொருவரும், ஆணும் பெண்ணும், தமது பாலின அடையாளத்தை ஒப்புக் கொண்டு ஏற்க வேண்டும். உடல், அறநெறி, மற்றும் ஆன்மிகம் சார்ந்த வேறுபாடு மற்றும் நிறைவுத்தன்மை ஆகியவை திருமண நலன்களையும் குடும்ப வாழ்வின் செழுமையையும் சார்ந்துள்ளது. பாலினங்களுக்கு இடையே வாழப்படும் நிறைவுத்தன்மை, தேவைகள் மற்றும் ஊடிடை ஆதரவின் வழியில் ஒரு பகுதியாக இணையர் மற்றும் சமூகத்தின் ஒத்திசைவு அமைந்துள்ளது.’’

*அமோரிஸ் லெத்திசியா*, 251: ‘‘குடும்பத்தின் மாண்பு மற்றும் எய்துபணி பற்றி கலந்துரையாடிய போது, ‘நேர்பாலீர்ப்பு நபர்களுக்கு இடையிலான ஒன்றிப்புகளைத் திருமணத்திற்குச் சமமான நிலையில் வைக்கும் முன்மொழிவுகளுக்கு, திருமணம் மற்றும் குடும்பத்திற்கான கடவுளின் திட்டத்திற்கு எவ்விதத்திலும் நிகரானதாக அல்லது தொலைநிலை ஒப்புமையாகவும் கூட நேர்பாலீர்ப்பு ஒன்றிப்புகளைக் கருதுவதற்கு அறுதியான எந்த அடிப்படையும் இல்லை’ என்றே மாமன்றத் தந்தையருக்கு புலப்பட்டது.’’

20. ஒரேபாலின இணையரை ஏற்பதற்கான உரிமைகளின் ஒரு நீட்சியாக, தங்கள் உடல் கூறுகளைத் தாண்டி எதிர் பாலின உறுப்பினர்களாகத் தங்களைச் சட்டப்படி ஏற்பதற்கான விருப்பங்களை வெளிப்படுத்தும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிகிறது. இந்த மனிதர்கள் பாலின நிறைவின்மையை அனுபவிக்கின்றனர் என்று கூறலாம் (அவர்கள் பொதுவாக ‘‘மாற்றுப்பாலினம்’’ எனப்படுகின்றனர்). இது பாலின அடையாளக் குறைபாடு என்று அறியப்படுகிறது, மேலும் உளவியல் குழுமத்தால் பாலின நிறைவின்மை என்று வகைப்படுத்த பெறுகிறது. இந்த தனிநபர்கள் எதிர் பாலினத்தாருக்கு உரிய வலுவான ஆசைகளை உணர்கின்றனர், மேலும் ஏற்கெனவே பெரும்பாலான நேரம் (தங்கள் உடை மற்றும் நடத்தை வழியாக) அவ்வாறு இருப்பது போன்று நடந்து கொள்கின்றனர். அவர்கள் அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படாத பொழுது, பெரும் தவிப்பையும் பாதுகாப்பின்மையையும் தங்கள் வாழ்நாள் முழுவதும் உணர்வதாகக் கூறப்படுகிறது. அவர்கள் குழந்தைகளாக அல்லது பெரியவர்களாக இருக்கலாம்.

பள்ளிகளிலும் மற்றப் பொது இடங்களிலும், இந்த சூழல் கழிவறைகள், குளியலறைகள், உடைமாற்று அறைகளைப் பயன்படுத்துவதில் பல சிக்கல்களை உருவாக்குகிறது. ஒரு நபர் ஒரு பெண்ணைப் போன்று உணர்ந்து பெண்கள் கழிவறையைப் பயன்படுத்த முற்படலாம், ஆனால் இது மற்ற பல பெண்கள் அதே கழிவறையைப் பயன்படுத்துவதில் ஏதுவின்மையை ஏற்படுத்தலாம். சிறுமியின் உடற்கூறுகள் உள்ள ஒரு நபர் தன்னை ஒரு சிறுவனாக உணர்ந்தால், பள்ளியில் உள்ள மற்ற சிறுவர்களோடு உடை மாற்றுவது மிக ஏதுவாக இருக்கலாம், ஆனால் இது உடைமாற்று அறையைப் பயன்படுத்தும் மற்றச் சிறுவர்களை எவ்வாறு பாதிக்கிறது என்ற வினாவை எழுப்புகிறது.

21. அத்தகைய மனிதர்களை, சிறப்பாக திட்டமான உடலமைப்பு கொண்டவர்களை எப்படி நடத்துவது என்பது பற்றி மருத்துவக் குழுமத்திற்குள் தெளிவானக் கருத்து காணப்படவில்லை. தாங்கள் விரும்பும் பாலினம் போன்று காணப்படவும் செயல்படவும் பாலின உறுப்புகளைக் கட்டமைக்க, தங்களுக்கு இயல்பாய் அமைந்த பாலின உறுப்புகளைச் சிதைக்கும் பாலின மீளமைப்பு அறுவைசிகிச்சைகள் மேற்கொள்ள விரும்புகிறவர்களும் இருக்கின்றனர். இயக்குநீர் செயல்மைகளோடு இணைந்த அத்தகைய அறுவைசிகிச்சைகள், அவர்களின் பாலியல் செயல்பாட்டில் இந்த மனிதர்களை நிலையான உணர்வோடு நுழைய இயலச் செய்வதில்லை. அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவர்களுக்கு தொடர்ந்து உளவியல் சிகிச்சை தேவையாகிறது.

நேர்த்தியாக இயங்கும் உடல் உறுப்புகளைச் சிதைக்கும் நடைமுறையை கத்தோலிக்க திருச்சபை தடை செய்கிறது.

*கதிம 2297*: "மருத்துவ சிகிச்சைக்குரியக் காரணங்களுக்காகத் தவிர, மாசற்ற நபர்களில் நேரடி நோக்கத்துடன் உறுப்புநீக்கல்கள், முடமாக்கல்கள், மற்றும் மலடாக்கல்கள் செய்வது அறநெறிச் சட்டத்துக்கு எதிரானது."

22. உண்மையில், இரண்டல்லா அடையாளங்களோடு, அதாவது ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இல்லாத பாலின அடையாளங்களோடுத் தங்களை இணைத்துக் கொள்ளும் உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் குழுவினரும் தற்போது இருக்கின்றனர். இந்த மக்கள் மாற்றுப்பாலின வகையில் வருவர், இருந்தாலும் அவர்களில் சிலர் அவ்வாறு அடையாளத்தை விரும்பவில்லை, ஏனெனில் இவ்வகை வரலாற்றில் ஒரு பாலினத்தில் இருந்து மற்றொரு பாலினத்துக்கு மாறுவோரைக் குறிக்கப் பயன்படுகிறது. இந்த மக்களில் பெரும்பாலானோர் தங்கள் உடல் கூறுகளைக் கொண்டு பாலின அடையாளத்தை தீர்மானிப்பதை ஏற்கவில்லை, ஏனெனில் அது தங்கள் உள்ளுணர்வுக்கு உரியது என்று கருதுகின்றனர். அவர்கள் தங்களை நடுநிலை பாலினம், இரண்டுமல்லாதவர், பாலற்றவர், பற்பாலினம், பாலொவ்வார், ஈருணர்வாளர், மூன்றாம் பாலினம் என பலவிதமாக வகைப்படுத்திக் கொள்கின்றனர். உண்மையில், 50க்கும் மேலான வேறுபட்ட பாலினங்கள் தற்போது சந்தையில் அணிவகுத்து நிற்கின்றன!

23. ஒவ்வொரு தனிநபரும் தமது உடலின் நோக்குசார் மெய்மையை ஏற்பது தேவை என்று கத்தோலிக்க திருச்சபை கற்பிக்கிறது. தனிநபருக்கு வழங்கப்படும் எந்த சிகிச்சையும் இந்த நோக்கத்தோடு இணைந்திருக்க வேண்டும்.

நமது உடல்கள் கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டுள்ள காரணத்தால், அவை மதிப்புடனும் மாண்புடனும் நடத்தப்பட வேண்டும். நமது உடல்கள் நமக்குரியவை என்பதால் மட்டுமே, நாம் விரும்பும் எவ்விதத்திலும் அதை நடத்த தனிப்பட்ட உரிமை கொண்டுள்ளோம் என்று பொருளன்று. உடலை நடத்தும் விதம் அதைத் தந்தவருக்கு உரிய மரியாதையைப் பிரதிபலிக்க வேண்டும்.

*கதிம 364*: ‘‘மனித உடல் ‘கடவுளின் உருவத்தின்’ மாண்பைப் பகிர்ந்து கொண்டுள்ளது: ஆவிக்குரிய ஓர் ஆன்மாவால் உயிரூட்டப் பெற்றுள்ளதால் மனித உடல் மதிப்புமிக்கது, மேலும் ஆவியாரின் கோயிலான கிறிஸ்துவின் உடலில், அது முழு மனித நபராகும் நோக்கம் கொண்டுள்ளது:

மனிதர், உடல் மற்றும் ஆன்மாவால் உருவாக்கப்பட்டிருந்தாலும், ஓர் ஒருமையாக இருக்கிறார். அவரது உடல்சார் நிலை வழியாக அவர் பொருள்சார் உலகின் தனிமங்களைத் தம்மில் ஒருங்கே கொண்டுள்ளார். அவர் வழியாக அவை அவற்றின் உயர்ந்த நிறைவுக்கு கொணரப் படுகின்றன, படைத்தவரின் புகழ்பாட அவற்றால் குரல் எழுப்ப முடியும். இந்த காரணத்தால் மனிதர் தமது உடல்சார் வாழ்வை இழிவாகக் கருத இயலாது. மாறாக தமது உடலை நல்லதாகக் கருதவும் மதிப்புடன் வைக்கவும் கடன்பட்டுள்ளார், ஏனெனில் கடவுளே அதைப் படைத்துள்ளார் மேலும் இறுதி நாளில் அதை மேலே எழுப்புவார்.’’

*லவ்தாத்தோ சீ*, 155: ‘‘மனிதச் சூழலியலும் மற்றொரு ஆழ்ந்த மெய்மையை உணர்த்துகிறது: மனித வாழ்வுக்கும் நமது இயற்கையில் பொறித்துள்ள அறநெறிச் சட்டத்திற்கும் இடையிலான உறவுநிலை மாண்புக்குரிய சுற்றுச்சூழலைப் படைக்க அவசியமாகிறது. திருத்தந்தை 16ம் பெனடிக்ட் ‘மனிதரும் அவர் மதிக்க வேண்டிய தமது விருப்பத்திற்கேற்ப மாற்றியமைக்க முடியாத ஓர் இயற்கையைக் கொண்டுள்ளார்’ என்ற உண்மையின் அடிப்படையில் ‘மனித சூழலியல்’ பற்றி பேசினார். நமது உடலே சுற்றுச்சூழலோடும் மற்ற உயிரினங்களோடும் நேரடி உறவுநிலையை நிறுவுகிறதைக் கண்டுணர்வது போதுமானது. நமது உடல்களை கடவுளின் கொடையாக ஏற்றுக்கொள்வது இந்த முழு உலகைத் தந்தையிடம் இருந்து வந்த கொடை மற்றும் நமது பொது இல்லமாக ஏற்பதும் வரவேற்பதும் முக்கியமானது, நமது உடல்கள் மீது நாம் முழு அதிகாரம் கொண்டுள்ளதாக எண்ணுவது, அடிக்கடி மறைமுகமாக, படைப்பின் மீது நாம் முழு அதிகாரம் கொண்டுள்ளதாக எண்ணச் செய்கிறது. நமது உடலை ஏற்க, அதற்கு அக்கறை காட்ட மற்றும் அதன் முழுப் பொருளில் அதை மதிக்கக் கற்றல், உண்மையான மனித சூழலியலில் இன்றியமையாதக் கூறாக இருக்கிறது. வேறொரு நபருடனான சந்திப்பில் என்னை நான் கண்டுணர இயல்வதற்கு, ஒருவரின் சொந்த உடலை அதன் பெண்மை அல்லது ஆண்மை இயல்பில் மதிப்பது அவசியமாகும். இவ்விதமாக படைப்பாளரான கடவுளின் கைவண்ணமான மற்றொரு ஆண் அல்லது பெண்ணின் தனிப்பட்ட கொடைகளை மகிழ்ச்சியாக ஏற்கவும், ஊடிடை வளப்படுத்தலைக் கண்டறியவும் முடியும். பாலியல் வேறுபாட்டை மறுக்க விரும்பும் மனப்போக்கு நலமானது அன்று, ஏனெனில் அதை எப்படி எதிர்கொள்வது அதற்கு தெரியாது.’’

24. கூடுதலாக, நேர்பாலீர்ப்பு தொடர்பான கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகள் இரண்டு பாலினங்களுக்கு வெளியே இருக்கின்ற வகையினரின் பாலியல் நடைமுறைகளுக்கும் பொருந்தும் என்று நாம் கூறலாம். ஒரே பாலினத்தவருக்கு இடையிலான பாலியல் செயல்கள் ‘‘உள்ளியல்பில் ஒழுங்கற்றது’’ (இயற்கை வடிவமைப்புக்க முரணானது) என்று கத்தோலிக்க

திருச்சபை அறிவிக்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவுநிலையைத் தவிர வேறெதற்கு இடையிலும், ‘‘பாலியல் நிறைவுத்தன்மை’’ இல்லை, மெய்யான பாலியல் கூட்டாளித்துவம் இல்லை.

*கதிம 2357*: ‘‘நேர்பாலீர்ப்பு என்பது தங்கள் பாலினம்சார் நபர்கள் மீதான பாலின ஈர்ப்பில் தனித்துவம் அல்லது முன்னாதிக்கம் கொண்ட ஆண்களுக்கு இடையிலான அல்லது பெண்களுக்கு இடையிலான உறவுகளின் அனுபவத்தைச் சுட்டுகிறது. இது நூற்றாண்டுகள் தோறும் வேறுபட்ட பண்பாடுகளில் பெரும் வகையான வடிவங்களை எடுத்துள்ளது. அதன் உளவியல் தொடக்கம் பெரிதும் விளக்க இயலாததாக நீடிக்கிறது. புனித மறைநூல், நேர்பாலீர்ப்பு செயல்பாடுகளை பெரும் ஒழுக்கக்கேடாகக் காட்டுகிறது, மரபும் ‘நேர்பாலீர்ப்பு செயல்பாடுகளை உள்ளியல்பில் ஒழுங்கற்றது’ என எப்பொழுதும் அறிவிக்கிறது. அவை இயற்கைச் சட்டத்துக்கு முரணானவை. வாழ்வின் கொடைக்கான பாலுறவுச் செயல்பாட்டை அவை அடைக்கின்றன. அவை நேர்மையான பற்றீர்ப்பு மற்றும் பாலியல் நிறைவுத்தன்மையில் இருந்து வருவதில்லை. எந்தச் சூழலிலும் அவற்றை ஒப்பியேற்க முடியாது.’’

25. சமூகத்தில் உள்ள பல மனிதர்கள் அத்தகைய அனுபவத்தால் ஆழ்ந்த போராட்டத்தில் இருக்கிறதை திருச்சபை கண்டுணர்கிறது. அத்தகைய மனிதர்கள் மதிக்கப்பட வேண்டும், மேலும் நீதியற்ற முறையில் தண்டிக்கப்பட அல்லது பாகுபடுத்தப்படக் கூடாது. மேலதிகமாக, அத்தகைய பாலினச் சார்புகளால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக எவ்வித உடல்சார் அல்லது வார்த்தைசார் வன்முறையும் கூடாது. எந்த வடிவிலான வன்முறை அல்லது நீதியற்ற பாகுபாட்டை நியாயப்படுத்த நேர்பாலீர்ப்பு செயல்கள் அறநெறியற்றவை என்ற உண்மையைப் பயன்படுத்த முடியாது.

*நேர்பாலீர்ப்பு நபர்களுக்கான மேய்ப்புசார் அக்கறை*, 10: ‘‘நேர்பாலீர்ப்பு நபர்கள் பேச்சில் அல்லது செயலில் தீமையின் வன்முறைக்கு ஆளாவது இரங்கத்தக்கது. இவ்வாறு அவர்கள் நடத்தப்படுவது எங்கு நடந்தாலும் திருச்சபையின் மேய்ப்பர்கள் கண்டிக்க வேண்டும். நலமான ஒரு சமூகத்தின் அடிப்படை விதிகளை ஆபத்துக்குள்ளாக்கும் விதத்தில், மற்றவர்களுக்கான ஒருவிதப் பொறுப்பின்மையை இது வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு நபரின் உள்ளியல்பான மாண்பு சொல்லிலும், செயலிலும் மற்றும் சட்டத்திலும் எப்பொழுதும் மதிக்கப்பட வேண்டும்.’’

26. ஒரேபாலின ஈர்ப்புள்ள மனிதர்கள் தங்களுக்கு தாங்களே உதவ முடியாது என்ற கருத்தை திருச்சபை ஒப்புக்கொள்ளவில்லை, ஆகவே அவர்களுக்கு மிக இயல்பான விதங்களில் தங்களை வெளிப்படுத்த அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

*நேர்பாலீர்ப்பு நபர்களுக்கான மேய்ப்புசார் அக்கறை*, 11: ‘‘ஒரேபாலினச் சார்பானது குறிப்பிட்ட நபர்களில் ஆழ்ந்தாய்ந்த தெரிவின் விளைவாக இருக்கிறதில்லை என்று கூறப்படுகிறது; ஆகவே நேர்பாலீர்ப்பு நபர் நேர்பாலீர்ப்பு பாணியில் நடந்துகொள்வதைத் தவிர வேறு தெரிவு

இல்லை. சுதந்திர குறைபாட்டில், அத்தகைய நபர் நேர்பாலீர்ப்பு செயல்பாட்டில் ஈடுபட்டாலும், அது குற்றமாகாது.

இங்கு, திருச்சபையின் ஞானமுள்ள அறநெறி மரபு அவசியமாகிறது, ஏனெனில் அது தனிநபர் பிரச்சனைகளை பொதுமைப்படுத்தி தீர்ப்பிடுவதற்கு எதிராக எச்சரிக்கிறது. உண்மையில், ஒரு நிகழ்வில் சூழ்நிலைகள் இருக்கலாம், அல்லது முன்னர் இருந்திருக்கலாம், அவை தனிநபரின் குற்றத்தன்மையை குறைக்கும் அல்லது நீக்கும்; அல்லது மற்றச் சூழ்நிலைகள் அதை அதிகரிக்கலாம். நேர்பாலீர்ப்பு நபர்களின் பாலியல் நடத்தை எப்பொழுதும் முழுமையாக கட்டாயத்தால் ஏற்படுகிறது, ஆகவே குற்றமாகாது என்று அடிப்படையின்றி கருதுவது எல்லா நிலைகளிலும் தவிரக்கப்பட வேண்டியதாகும். மனித நபரின் பண்புகளை வடிவமைக்கிற மற்றும் நேர்பாலீர்ப்பு நபராக இருந்தாலும் அவரது மாண்பை அவருக்கு வழங்குகிற அடிப்படை சுதந்திரம் இன்றியமையாதது. ஒவ்வொரு தீமையில் இருந்தும் மனந்திருந்துவதைப் போன்று, நேர்பாலீர்ப்பு செயல்பாட்டைக் கைவிட கடவுளின் விடுவிக்கும் அருளுடன் தனிநபரின் ஆழ்ந்த ஒத்துழைப்பு தேவைப்படும்.''

27. தன்னைக் குறித்த உணர்வைத் தாண்டி, ஒரேபாலின ஈர்ப்புள்ள மனிதர்கள் கற்புள்ள வாழ்வு வாழ, அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால், தங்களது துன்பங்களை உலக மீட்புக்கான கிறிஸ்துவின் பலியோடு ஒன்றிக்க அழைக்கப்படுகின்றனர். அவர்கள் பண்படுத்த வேண்டிய சில ஆன்மிக ஒழுக்கங்களும் இருக்கின்றன, ஆழ்ந்த கற்புள்ள நட்புறவுகள், செபம் மற்றும் அருளடையாளங்கள் வழியாக கடவுளுடன் நெருக்கமான உறவுநிலை போன்றவை. கற்புக்கான இந்த அழைத்தலுக்கு அவர்கள் நம்பகமாக இருந்தால், அவர்கள் கிறிஸ்தவ நேர்த்தியை (நிறைவை) அடைய முடியும் என்பதை திருச்சபை ஏற்கிறது.

*கதிம 2358*: ''ஆழ்ந்த நேர்பாலீர்ப்பு போக்கு கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை தவிர்க்கக் கூடியதன்று. இந்த சாய்வு, ஒழுக்கத்திற்கு முரணானது, அவர்களில் பலருக்கும் சோதனையைக் கட்டமைக்கிறது. அவர்கள் மதிப்பு, பரிவு, மற்றும் உணர்வோடு ஏற்கப்பட வேண்டும். அவர்களைப் பொருத்தவரை நீதியற்றப் பாகுபாட்டின் ஒவ்வொரு அறிகுறியும் தவிர்க்கப்பட வேண்டும். இந்த நபர்கள் கடவுளின் விருப்பத்தைத் தங்கள் வாழ்வில் நிறைவேற்ற, அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால், தங்களது நிலையில் அவர்கள் சந்திக்கும் இடர்களை ஆண்டவரின் சிலுவைப் பலியோடு ஒன்றிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.''

*கதிம 2359*: ''நேர்பாலீர்ப்பு நபர்கள் கற்புடைமைக்கு அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு அகச் சுதந்திரத்தைக் கற்பிக்கும் தன்னாளுகைப் புண்ணியங்களால், சில நேரங்களில் அதில் விருப்பமற்ற நட்புறவுகளின் ஆதரவால், செபம் மற்றும் அருளடையாள அருளால், அவர்கள் படிப்படியாகவும் தீர்க்கமாகவும் கிறிஸ்தவ நேர்த்தியை அணுக முடியும், அணுக வேண்டும்.''

28. நேர்பாலீர்ப்பு சார்புகள் (அல்லது மேற்குறிப்பிட்ட மற்றெந்த பாலியல் சார்புகள்) ஒரு மனிதரை மிகுந்த பாவமுள்ளவர் ஆக்குகிறது என்று திருச்சபை அறிவிக்கவில்லை என்பதை

கவனியுங்கள். எனினும், இந்த போக்கு அறநெறியில் தவறானச் செயல்களை நோக்கி இழுக்கிறது என்பதை திருச்சபை சுட்டிக் காட்டுகிறது, இதை நேர்மையாக ஒப்புக்கொள்வது தேவையாகிறது. பல மனிதர்கள் இதை வாழ்நாள் போராட்டமாக அனுபவிப்பர் என்பதையும் திருச்சபை கண்டுணர்கிறது, ‘‘மற்ற ஒவ்வொருவரையும் போல் சாதாரணமாக’’ அவர்கள் மாற வேண்டும் என்று கோரவில்லை. எல்லா மக்களும் கற்புள்ள வாழ்வுக்கு அழைக்கப்படுகின்றனர் என்று திருச்சபை எடுத்துரைக்கிறது, ஒரேபாலின ஈர்ப்புகளை அனுபவிப்போர், அதே பாலினத்து மக்களுடனான பாலியல் செயல்பாடுகளைத் தவிர்ப்பதும் இதில் அடங்கும்.

*நேர்பாலீர்ப்பு நபர்களுக்கான மேய்ப்புசார் அக்கறை*, 12: ‘‘ஆண்டவரைப் பின்பற்ற விரும்பும் நேர்பாலீர்ப்பு நபர்கள் பிறகு என்ன செய்யலாம்? அடிப்படையில், கடவுளின் விருப்பத்தைத் தங்கள் வாழ்வில் செயல்படுத்த, தங்களது நிலைக்கான புண்ணியத்தை அடைய அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் மற்றும் இடர்களை ஆண்டவரின் சிலுவைப் பலியோடு இணைக்க அழைக்கப்பட்டுள்ளனர். அந்த சிலுவை, நம்பிக்கையாளருக்கு, கனிதரும் பலியாக இருக்கிறது, ஏனெனில் அந்த இறப்பில் இருந்து வாழ்வும் மீட்பும் வந்தன. சிலுவையைச் சுமப்பதற்கான அல்லது கிறிஸ்தவத் துன்புறுதலைப் புரிந்து கொள்வதற்கான எந்த அழைப்பும் சிலரது கசப்பான கிண்டலைச் சந்திக்கும், கிறிஸ்துவைப் பின்பற்றும் எல்லாருக்கும் இது நித்திய வாழ்வுக்கான வழி என்பது நினைவுகூரப்பட வேண்டும்.

... ஆனால் இறப்பில் இருந்து வாழ்வு வரச் செய்த மற்றும் தம்மில் நம்பிக்கை கொண்டோர் பாவத்தின் இடத்தில் புண்ணியம் செய்வதற்கு ஆற்றல் அளிக்கிற கடவுளின் விருப்பத்திற்காக சேவை செய்வதில் தன்னை மறுத்தலே சிலுவையாக இருக்கிறது.’’